சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை – வேலைவாய்ப்புப் பிரிவு – பணியிடை இறந்த அரசு ஊழியர் திரு. மு. கண்ணன் என்பவரின் மகள் திருமதி க. பிரேமலதா அவர்களுக்கு கருணை அடிப்படையில், இளநிலை உதவியாளராக அவர் பணியில் சேர்ந்த நாளான 07.01.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (என்2)த் துறை</u>

அரசாணை(2டி) எண்:36

நாள் : 03.09.2020.
சார்வரி, ஆவணி – 18
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள். 23.01.2020.
2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள். 01.08.2018.
3. இயக்குநர் (மு.கூ.பொ), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சென்னை அவர்களின் கடிதம் எண். நிர்2/9406/2015, நாள். 03.02.2020.

------

**<u>ஆணை:</u>**

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், திரு. மு. கண்ணன், உதவியாளர் என்பவர் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்ககம், கிண்டி, சென்னை–32 அலுவலகத்தில் பணிபுரிந்து, ஓய்வுபெற அனுமதிக்காமல் தற்காலிக பணிநீட்டிப்பில் இருந்தபோது 08.05.2013 அன்று பணியிடை இறந்ததால் அவரது வாரிசான திருமதி க. பிரேமலதா என்பவர் கருணை அடிப்படையில் பணிநியமனம் அளிக்கக் கோரி 30.03.2015 அன்று விண்ணப்பித்திருந்தார் என்றும் விண்ணப்பம் அளித்த போது தனியரின் வயது 32 என்றும் தனியரின் பிறந்த தேதி 27.01.1983 என்றும் தனியர் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் மார்ச் 1999–இல் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும் அரசு ஊழியர் மறைவிற்கு முன்னரே கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரும் பெண் வாரிசுதாரருக்கு திருமணமாகியுள்ளது என்றும் அதனால் அரசாணை (நிலை) எண். 78, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ–1) துறை, நாள் 21.04.2017 மற்றும் அரசுக் கடிதம் எண். 43007A/Q/90–3, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 04.03.1991 ஆகியவற்றை பரிசீலித்து திருமதி க. பிரேமலதா என்பவருக்கு தற்போது நடைமுறையில் உள்ள விதிகளின் அடிப்படையில், பணிநியமனம் பெற தகுதியுடையவர் என்று அரசு கடித எண். 15736/என்.2/2018–2, நாள் 19.12.2018-இல் தெரிவிக்கப்பட்டதால், பணியிடை இறந்த அரசு ஊழியரின் மகள் திருமதி க. பிரேமலதா என்பவருக்கு பணி நியமனம் வழங்கப்பட்டு 07.01.2019 அன்று முற்பகல் முதல் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்ககம், கிண்டி, சென்னை–32 என்ற அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார் என்றும் திருமதி க. பிரேமலதா என்பவருக்கு அவர் பணியில் சேர்ந்த நாளான 07.01.2019 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்து ஆணைகள் வழங்கும்படி வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்று, கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி க. பிரேமலதா,

இளநிலை உதவியாளர் என்பவரது பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 07.01.2019 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்யும்பொருட்டு, அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ,1) துறை, நாள் 23.01.2020-க்கு விலக்களித்தும் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-இல், தமிழ்நாடு சட்டம் எண்.14/16, பிரிவு 15 மற்றும் 28(2)—ஐ மேற்காணும் சட்டப் பிரிவு 58-இன்கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி தளர்வு செய்து ஆணையிடப்படுகிறது. இது குறித்து தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

3. இவ்வரசாணை, இத்துறையின் 'க்யூ' பிரிவு மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஜி) துறையின் அலுவல் சாரா குறிப்பு எண். 20077 நாள் 02.09.2020—இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

**பெறுநர்**

திருமதி க. பிரேமலதா, இளநிலை உதவியாளர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்ககம், கிண்டி, சென்னை—600 032. (வழி: இயக்குநர் (மு.கூ.பொ), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, கிண்டி, சென்னை—600 032.)
இயக்குநர் (மு.கூ.பொ), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, கிண்டி, சென்னை—600 032.

**நகல்**

அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை—600 009.
அரசு இணை செயலாளரின் நேர்முக எழுத்தர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை—600 009.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ—1) துறை, சென்னை—600 009.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (அநமு—2) துறை, சென்னை—600 009.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஜி) துறை, சென்னை— 600 009.
இருப்பு கோப்பு /கூத்த நகல்/ உபரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்